# மாசு கட்டுப்பாட்டு வாரியம் பிளாஸ்டிக் தடைக்கு 'ஆடியோ'

**அவிநாசி, டிச. 16–**

புத்தாண்டு முதல், பிளாஸ்டிக் பயன்படுத்த அரசு தடை விதித்துள்ள நிலையில், இதுதொடர்பாக, மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில், விழிப்புணர்வு 'ஆடியோ' வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த, மாநில அரசு தடை விதித்துள்ளது. வரும், முதல் தேதியில் இருந்து, தடை அமலுக்கு வரவுள்ளது.

ஏற்கனவே, அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள், உள்ளாட்சி அமைப்பினர் மூலம், விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். பிளாஸ்டிக் தடை உத்தரவை அமல்படுத்துவதில், அரசு முனைப்புக்காட்டி வருகிறது. இப்பணியில், மாநில மாசுகட்டுப்பாட்டு வாரியம், முக்கிய பங்காற்ற உள்ளது.

இதுதொடர்பாக, மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள விழிப்புணர்வு 'ஆடியோ'வில் கூறியுள்ளதாவது;

'தமிழ்நாடு அரசு அறிவிப்பு படி, ஜன., 1, 2019 முதல், 'யூஸ் அண்டு த்ரோ' பிளாஸ்டிக் பொருட்களுக்கு முற்றிலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவற்றை தயாரிக்கவோ, சேமித்து வைக்கவோ, வினியோகிக்கவோ, விற்கவோ, எடுத்து செல்லவோ அனுமதியில்லை' என, கூறப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் மூலம் இதை ஒளிபரப்ப, அறிவுறுத்தப்பட்டுள்ளது. சமூக வலை தளங்களிலும், அந்த ஆடியோ வைரலாகி வருகிறது.